முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 63 / 06

வாதியின் /பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம்(1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி ) திருமதி.தி.சண்முகப்பிரியா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| பெயர் | ஸ்டாலின் பிரபு (பி.சா.2) | சாதி |
| த/பெ. | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுகா | | வயது |

-----------------------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை 25-02-2020</u>

நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவுறு எழுத்தராக பணிபுரிகிறேன். சம்மனில் கண்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சர்வே எண் 205/4க்குரிய சிட்டா நகலை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆகும். அது சுப்பாராஜ் த/பெ. ராமசாமி நாயக்கர் பெயரில் உள்ளது. சர்வே எண்ணுக்குரிய செட்டில்மெண்ட் பதிவேட்டை கொண்டுவந்துள்ளேன். அதுவும் ரா.சுப்பாராஜ் பெயரில்தான் உள்ளது. அது சா.சா.ஆ.2 ஆகும்.

பிரதிவாதிகள் தரப்பில் 8, 9 வழக்கறிஞர்கள் இல்லாததால் அவர்கள் தரப்பில் கு.வி. இல்லையென முடிக்கப்படுகிறது.

வாதி தரப்பில் கு.வி.-

பதிவுறு எழுத்தராக எத்தனை வருடமாக பணிபுரிகிறேன் என்றால் 3 1/2 வருடமாக. பட்டா எண் 943 என்று சா.சா.ஆ.1ல் கண்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் எழுதியுள்ள குறிப்பு என்னவென்று தெரியவில்லை. சுப்புராஜ் பெயரில் எப்படி வந்தது என்று எந்தக் குறிப்பும் இல்லையென்றால் சரிதான். சா.சா.ஆ.2ல் பட்டா எண் 943 என உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சுப்ப ராஜீ என்றுதான் உள்ளது என்றால் சரிதான்.

ம.வி. இல்லை.